

# உவமைத் தொடர்

## படத்திற்கேற்ற உவமைத் தொடரைத் தெரிவு செய்க.







LIVEWORKSHEETS

**உவமைத்தொடருக்கு ஏற்றப் பொருளைத் தெரிவு செய்க.**

1) நகமும் சதையும் போல

2) காந்தம் இரும்பைக் கவர்வது போல

3) எலியும் பூனையும் போல

எப்போதும் பகைமையுணர்ச்சி கொண்டிருத்தல்

மிக நெருக்கமாக

ஒன்றைத் தன் வசம் கவர்ந்திழுத்தல்

LIVEWORKSHEETS

சூழலுக்கு ஏற்ற உவமைத்தொடரைத் தெரிவு செய்க.

சீதாவும் கீதாவும் நல்ல நண்பர்கள். சீதாவிற்கு ஒரு நாள் காய்ச்சல் கண்டது. அவளால் ஒரு வாரத்திற்குப் பள்ளிக்கு வர இயலவில்லை. கீதா சீதாவின் வீட்டிற்குச் சென்று தினமும் அவளை நலம் விசாரித்து வந்தாள். சீதாவிற்குப் பள்ளிப் பாடங்களைப் போதித்தாள். அவர்கள் இருவரும் என்றும் இதுபோல் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என பெற்றோர்கள் அவர்களை வாழ்த்தினர்.

அமுதன் பூப்பந்து விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான். அவன் பள்ளியை பிரதிநிதித்துப் பல போட்டிகளில் பங்கெடுத்தான். அவற்றில் அபார வெற்றியும் பெற்றான். நிருபர்களின் பேட்டியின் போது, சிறு வயது முதலே பூப்பந்து விளையாட்டு வீரர் 'லீ சோங் வெய்' அவர்களின் விளையாட்டுத் திறமையின் பால் ஈர்க்கப்பட்டதே தன் வெற்றிக்குக் காரணம் என அமுதன் கூறினான்.

அமுதாவும் அவள் தம்பி கபிலனும் எப்போதும் சண்டை இட்டுக் கொள்வர். எந்த ஒரு பொருளும் தனக்கு தான் முதலில் தர வேண்டும் என்று இருவரும் பிடிவாதம் பிடிப்பர். இதை அறிந்த அவர்களின் பெற்றோர், அவர்கள் இருவரையும் அழைத்துக் கண்டித்தனர்.

LIVEWORKSHEETS